

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.5.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரும்பு நிலுவைத் தொகை 97.77 கோடி ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த திருவண்ணாமலை, தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத் துறை ஆணையர் அன்பழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வட்டாரத்திற்குட்பட்ட காளி கிராமத்தில் நடைபெறும் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர்கல்வி துறை அமைச்சர் .கோவி செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட கோரிக்கை மனுக்களுக்குரிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் .நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

### கரும்பு வழங்கிய விவசாயிகள் பயன் பெறும் வகையில்

# கரும்பு நிலுவைத் தொகை ரூ.97.77 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கரும்பு விவசாயிகள் நன்றி!

**சென்னை, மே 30 -**

**கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன் பெறும் வகையில் கரும்பு நிலுவைத் தொகை ரூ.97.77 கோடி வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த விவசாயிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.5.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரும்பு நிலுவைத் தொகை 97.77 கோடி ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த திருவண்ணாமலை, தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார், என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள், 202425 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள்அரவைப் பணி மேற்கொண்டுள்ளன.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 2024-25 அரவைப் பருவத்தில் 15.05.2025 வரை 18.81 இலட்சம் மெ.டன் அரவை செய்து, 8.40 சதவிகித சர்க்கரை கட்டுமானத்தில் 1.58 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன.

அரவை மேற்கொண்ட 12 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கள்ளக்குறிச்சி1, கள்ளக்குறிச்சி 2, சுப்பிரமணிய சிவா, திருப்பத்தூர் ஆகிய 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் தாங்கள் கொள்முதல் செய்து, அரவை செய்த 10.30 இலட்சம் மெ.டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய 329.34 கோடி ரூபாயை தங்கள் ஆலையின் சொந்த நிதியி லிருந்து கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு தொகையை வழங்கி உள்ளன.

பின்வரும், மோகனூர், தர்மபுரி, வேலூர், செங்கல்வராயன், திருத்தணி, எம்.ஆர்.கே., செய்யார், மதுராந்தகம் ஆகிய 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தாங்கள் கொள்முதல் செய்து, அரவை செய்த 8.51 இலட்சம் மெ.டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய 272.87 கோடி ரூபாயில் 175.10 கோடி ரூபாய் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு தங்கள் சொந்த நிதியிலிருந்து வழங்கியது போக ஆலையின் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் நிலுவையாக 97.77 கோடி ரூபாய் விவசாயி களுக்கு வழங்காமல் வைத்திருந்தன.

எனவே, கரும்பு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் விதமாக, தமிழ்நாடு அரசு 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழிவகைக் கடனாக 97.77 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது இந்த நிதியுதவி கொண்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு சர்க்கரை ஆலைகளால் கரும்பு பணம் நிலுவையின்றி முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டு விட்டது.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத் துறை ஆணையர் அன்பழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எதிர்க்கட்சியினரின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளோம்!

# சட்ட நீதியையும் பெண்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மே 30 -**

**சென்னை மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வழக்கை துரிதமாக நடத்தி நீதி பெற்றுள்ளதன் மூலம் எதிர்க்கட்சிகளின் எண்ணத்தை தவிடு பொடியாக்கியுள்ளோம் என்றும், சட்ட நீதியையும் பெண்கள் பாதுகாப்பையும் எந்நாளும் உறுதி செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு–

சென்னை மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வழக்கைத் துரிதமாக நடத்தி, ஐந்தே மாதத்தில் நீதியைப் பெற்றுத் தந்துள்ளது நமது காவல்துறை. விசாரணை அதிகாரிகளுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் மாண்பமை நீதிமன்றத்துக்கும் நன்றி!

காவல்துறையினரிடம் நான் தொடர்ந்து கூறுவது: “குற்றம் நடக்கக் கூடாது; நடந்தால் எந்தக் குற்றவாளியும் தப்பக் கூடாது; விசாரணையைத் துரிதமாக நடத்தி, தண்டனை பெற்றுத் தர வேண்டும்!.

குற்றங்களின் கூடாரமாக அன்று அரசை நடத்தி, இன்று அவதூறுகளை அள்ளித் தெளித்து, மலிவான அரசியல் செய்யத் துடித்த எதிர்க்கட்சியினரின் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கி உள்ளோம்.

சட்டநீதியையும் பெண்கள் பாதுகாப்பையும் எந்நாளும் உறுதிசெய்வோம்”!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாட்களில் தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கிறோம்! பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

# எடப்பாடி பழனிசாமி ஆட்சி குற்றவாளிகளுக்கு துணை போனதை நாடே அறியும்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அறிக்கை!

**சென்னை, மே 30 -**

**தமிழகக் காவல்துறை விசாரித்த அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறோம்! என்றும்,**

**சிபிஐ விசாரித்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு ஆறரை ஆண்டுகள் நடைபெற்றது!**

**2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வழக்கை நடத்திய லட்சணத்தையும் குற்றவாளிகளுக்கு துணை போனதையும் இந்த நாடறியும் என்றும்**

**கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கனிமொழி கருணநிதி எம்.பி.யின் அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஜீன் 2ம் தேதி தண்டனை விவரங்களை அளிப்பதாக நீதிபதி அறிவித்திருக்கிறார்.

**துரிதமாக குற்றப் பத்திரிக்கை தாக்கல்!**

கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வில் மிகத் துரிதமாகக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, வழக்கு விசாரணையைமுடித்து, குற்றவாளிக்குத் தண்டனையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது தமிழகக் காவல் துறை.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் 23ம் தேதி அதே பல்கலைக்கழக மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். உடனே குற்றவாளி ஞானசேகரனை போலீஸ் கைது செய்தது. 3 பெண் ஐ.பி.எஸ் அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழு, வழக்கை விசாரித்தது. பாலியல் வழக்கு மட்டுமல்லாது, ஏற்கெனவே ஞானசேகரன் மீதான திருட்டு, ஆள் கடத்தல், வீடு புகுந்து கொள்ளையடித்தல் உள்ளிட்ட பல வழக்குகளையும் காவல் துறை விசாரித்தது. மார்ச் மாதம் முதல் விசாரணை தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் ஏப்ரல் 23ம் தேதி முதல் சாட்சிகள் விசாரணை நடைபெற்றது. பாதிக்கப்பட்ட மாணவி உள்பட 29 பேர் சாட்சியம் அளித்தனர். 75



சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சம்பவம் நடந்த நாளிலிருந்து சரியாக 157ஆவது நாளில் குற்றவாளியின் தண்டனையை உறுதி செய்திருக்கிறது தமிழகக் காவல் துறை. இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில், சி.பி.ஐ. விசாரணையை கேட்ட போது, 'சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை' என டி.ஜி.பி. அறிக்கை தாக்கல் செய்தார். சி.பி.ஐ. கூட இவ்வளவு துரிதமாக விசாரி த்திருக்க முடியுமா? எனக் கேட்கும் அளவுக்கு இந்த வழக்கைத் தமிழகக் காவல் துறை மிகச் சிறப்பாக நடத்தி குற்றவாளியின் குற்றத்தை நிரூபித்திருக்கிறது.

இந்த வழக்கு தொடர்பாகக் கடந்த ஜனவரி 8ம் தேதி சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, “இந்த வழக்கின் குற்றவாளி மீது தயவுதாட்சணியம் இல்லாமல் காவல்துறை நடவடிக்கை எடுக்கும். இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு உச்சபட்சத் தண்டனை கிடைக்கும்'' என்று சொன்னார். அதனைச் செய்து காட்டியிருக்கிறார்.

**அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கை ஒப்பிட்டுப் பாருங்கள்!**

அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு வெளியாவதற்கு 15 நாட்களுக்கு முன்புதான், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்குச் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கோடு அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு நாட்டையே உலுக்கியது. பொள்ளாச்சி பாலியல் குற்றச் சம்பவம் கடந்த 2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை நடைபெற்றாலும், 2019ம் ஆண்டுதான் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைக்குத் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் பொள்ளாச்சி பாலியல் வழக்கை வெளிக் கொணராமல் போயிருந்தால் அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு விவகாரத்தை மூடி மறைத்திருக்கும். அ.தி.மு.க.வினர் சம்பந்தப்பட்டிருந்ததால் வழக்கைப் பதியாமல் இழுத்தடித்ததோடு பாதிக்கப்பட்ட மாணவியின் அண்ணனையே தாக்க முயன்றார்கள்.

**பொள்ளாச்சி வழக்கு கடந்து வந்த பாதை!**

பொள்ளாச்சி பாலியல் வழக்கு கடந்த வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

2019 பிப்ரவரி 24 கல்லூரி மாணவி புகார் அளித்தார். வழக்குப் பதிவு செய்து 3 பேரைக் கைது செய்தனர்.

2019 மார்ச் 4 முக்கிய குற்றவாளி திருநாவுக்கரசு கைது.

2019 மார்ச் 12 சி.பி.சி.ஐ.டி.க்கு வழக்கு மாற்றம்.

2019 ஏப்ரல் 27 வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம்.

2019 மே 21 முதல் குற்றப்பத்திரிகை தாக்கல்.

2021ஜனவரி 6 இறுதி குற்ற ப்பத்திரிகை தாக்கல்.

2023 பிப்ரவரி 24 சாட்சி விசாரணை தொடங்கியது.

2024 பிப்ரவரி 23 - குற்றவாளிகள், சாட்சியங்களிடம் தினமும் விசாரணை நடைபெற்றது.

2025 மே 13 - தீர்ப்பு.

2019 பிப்ரவரி தொடங்கி 2025 மே மாதம் வரையிலான ஆறரை ஆண்டுகள் பொள்ளாச்சி பாலியல் வழக்கு நடைபெற்றது. இத்தனைக்கும் அந்த வழக்கை விசாரித்தது சி.பி.ஐ. ஆனால், அண்ணா பல்கலைக்கழக வழக்கை விசாரித்தது தமிழகக் காவல் துறை. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் தீர்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கை அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தி.மு.க. இளைஞர் அணி

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய மற்றும் கரூர் மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 30.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | ஈரோடு தெற்கு | தங்கம் மஹால், மேட்டுக்கடை, பெருந்துறை சாலை, ஈரோடு. |
| | மாலை 3.00 மணி | ஈரோடு மத்திய | விருட்சம் ஹால், பைபாஸ் சாலை, வாவிக்கடை, பெருந்துறை. |
| 31.05.2025 சனிக்கிழமை | காலை 9.30 மணி | கரூர் | ஆர்த்தி அழகம்மை மஹால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 27-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.யிடம்

# பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய இளைஞர் அணி நிர்வாகிகள் வாழ்த்து!

பெரம்பலூர், மே 30 -

பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஒன்றிய,நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.யிடம் வாழ்த்துப் பெற்றனர்!

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்பி., யை பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஒன்றிய,நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

அப்போது மாவட்ட கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன்,ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வ லெட்சுமி சேகர், ஏ.எஸ். ஜாகிர்உசேன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.